**செ. கு. எண்: 2O** **நாள்:11.1.2012.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 11.1.2012

ஈரோடு மாவட்டம், ஈரோடு நகரம், கல்யாணசுந்தரம் வீதியைச் சேர்ந்த திரு. ஜார்ஜ் என்பவரின் மகன் சிறுவன் சுரேஷ்குமார் மற்றும் நாடார் மேடு பகுதியைச் சேர்ந்த திரு. பாபு என்பவரின் மகன் சிறுவன் முகமது ஆசிப் ஆகிய இருவரும் 8.1.2012 அன்று காவேரி ஆற்றில் குளிக்கும் போது நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், வெளிக்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு. வீரராகவன் என்பவரின் மகன், புவனேஸ்வரன் 10.1.2012 அன்று பேருந்தில் ஏறும்போது தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்துகளில் அகால மரணமடைந்த சுரேஷ்குமார், முகமது ஆசிப் மற்றும் புவனேஸ்வரன் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவங்களில் உயிரிழந்த சுரேஷ்குமார் முகமது ஆசிப் மற்றும் புவனேஸ்வரன் ஆகியோரின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**